49

T.D.R.C. NO: ௨091

௨-1908

சுதேச நிதித் தொழிற் சங்கம்

X8
N08
11984

சென்னைச்

# சுதேசநிதித் தொழிற் சங்கம்.

சஞ்சிகை—1.

(3000 Copies.)

இச்சங்கத்தின் நிர்வாக சபையார் தொழில் அபிவிர்த்தி சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அப்போதப்போது துண்டு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஜனங்கள் உபயோகத்துக்காக பிரசுரஞ்செய்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். தேச பக்தர்கள் எழுதியனுப்பினால் கவனிக்கப்படும். நீண்டதாயிருக்கக்கூடாது.

சென்னை.

"சுதேசமித்திரன்" அச்சுக்கூடம்

1908.

844.8116
2091

# மூன்றாம் இந்தியத் தொழில் முயற்சிக் கான்பரன்ஸில்

## அக்ராஸநாதிபத்ய மஹோபந்யாஸம்

சென்ற டிசம்பர் மாதம் 30-ந்தேதி சூரத்திற்கூடிய மூன்றாவது இந்தியத்தொழில் முயற்சிக் கான்பரன்ஸில் அக்கிராஸனம் வகித்த திவான் பகதூர் அம்பாலால் ஸக்கர்லால் தேசாயி அவர்கள் எம். ஏ. எல். எல். பி (பரோடா ஸமஸ்தானத்து மாஜி சிரேஷ்ட நியாயாதிபதி) பின்வருமாறு பிரசங்கித்தார்:—

கனவான்களே-இந்த முக்கியமான கான்பரன்ஸில் என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்காக உங்களை மனமுவந்து வந்திக்கின்றேன். எனக்கு முன் இந்த ஸ்தானத்தை வகித்தவருக்கிருந்த வர்த்தக வியாபாரக் கைத்தொழில் அனுபோகமாவது," முதல் வருஷக் கான்பரன்ஸின் அக்ராஸநாதிபதியாகிய ஸ்ரீயுத ரமேச சந்திரதத்தின் புலமையும், விரிந்த பொருள் நிலையறிவுமாவது எனக்கில்லை. தொழில் முயற்சிகளுடன் எனக்கு நேரான சம்பந்தமுமில்லை. இந்தியப்பொருளாட்சி நிலையைப்பற்றி நான் சில காலமாகத்தான் படித்துவரத் தொடங்கியிருக்கிறேன். ஆகவே உங்கள் ஆலோசனைக்காக நான் வெளியிடப்போகும் கருத்துகளிலே யாதாயினும் குறைகளிருக்குமாயின், அவற்றைத் தயவு கூர்ந்து தாட்சண்யத்துடன் கிரஹிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

நமது, பொருள் நிலை பீடிகை சம்பந்தமான மூலாதார சங்கதிகள் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கின்றன. அவை:—(I) தேசக் குடிகளுள் அநேகருக்குள் நெடுங்கால வறுமை விரிந்து வியாபித்திருத்தல்; (2) சாதாரண ஜனங்கள் கல்வி யறிவின்றிப் பெரும் பாமரர்களா யிருத்தல்; (3) பருத்தி முதலிய இயற்கை விளைபொருள்கள் ஏராளமாய் மலிந்திருத்தல்; (4) இவற்றை வஸ்திரமாக நெய்தல் முதலிய வேலைகளைச் செய்வதற்கு நம்மவருக்கு சாஸ்திர ஞானமும் தொழிற்கல்வி யறிவும் அநுபோகத்திறமையும் இல்லாமை; (5) வர்த்தகம் செய்வதற்கு வேண்டிய துணிவும் சாகசமும் குறைவுற்றிருத்தல்; (6) பெரும் பிரயத்தனங்களுக்கு வேண்டிய மூலதனக் குறைவு; ஆகிய வைகளேயாம். இத்தகைய நிலைமைகளிலிருந்து நம்தேசத்

தில் தொழில் முயற்சியை விஸ்தாரமாய்ப் பலப்படுத்தித் தலையெடுக்கச்செய்ய ஆலோசிக்க வேண்டியதே இப்பொழுது நமக்கேற்பட்டுள்ள வேலைபாகும்.

இவற்றிற்குப் பரிஹாரங்களாய்ச் சொல்லப்படும் உபாயங்கள் மற்றத் தேசங்களில் சித்தி பெற்றிருக்கின்றன. அவை யாவை யெனில். எலிமெண்டரி அல்லது பிரதம வித்யாப்யாசத்தை விசேஷமாகப் பரவச்செய்தல் தொழிற்கல்விப் பாடசாலைகளையும் சாஸ்திர ஞானபோதக ஸ்தாபனங்களையும் ஏற்படுத்துதல், வர்த்தக பாடசாலைகளை ஸ்தாபித்தல், மாணவர்களை அந்நியதேசங்களுக்கனுப்பி சாஸ்திர விஷயமாயும் தொழில் விஷயமாயும் பயின்று அறிவு பெற்றுவரச்செய்தல் முதலியனவாம். இந்தப் பகுதிகளெல்லாம் கல்வி யென்னும் விரிந்த பொருள்கொண்ட தலையின் கீழ் அடங்கும். அதாவது தேச ஜனங்களுக்குக் கல்வியை நன்றாய்க் கற்பிக்கவேண்டுமென்பதாம். இவ்விஷயமாக இது வரையில் சொற்பமாய் சில முயற்சிகள் செய்யப்பட்டன. அம்முயற்சிகள் போதா. மகா ஜனங்களும் தனிகர்களும் விவேகிகளும் ஏகோபித்து இந்தக் கல்வியை வேண்டினவருக்கு விசேஷமாய்க் கற்பிக்கப் பெரும் பிரயத்தனங்கள் இடைவிடாது செய்யவேண்டும். இப்படிப்பெரும் பிரயத்தனம் செய்தாலன்றி வர்த்தகத்தில் நாம் உயர்வு பெறுவதற்கு முடியாது.

பெருங்காரியங்கள் ஆரம்பமாகும் வரையில் நாம் கைகட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருத்தலாகாது. அதாவது நம் சக்திக்குத் தக்கபடி நமக்குள்ள உப பத்திகளை விநியோகித்து, இவ்வேலையை சொற்பமாகவாயினும் தொடங்கவேண்டும். தற்காலத் தொழில் வகை சம்பந்தமான பெரிய பெரிய சங்கதிகளில் உள்ள சிக்குகளையும், அவற்றின் பரந்த விரிவையும், அவற்றின் முடிவான அடி ஆதாரத்தையும் நம் வர்த்தகர்கள் பெரும்பாலும் தெரிந்து கொள்ளவேயில்லை. ஆயினும் காலஞ்சென்ற ஜாம் செட்ஜி தாதாவைப்போன்ற புத்தி கூர்மையுள்ள மகா மேதாவிகள் நம் அதிர்ஷ்ட வசத்தால் நம்முள் இடையிடையே தோன்றி வருகின்றனர். அன்றியும் இந்தியாவின் மேற்குப் பிரதேசத்திலும், வட மேற்குப் பிரதேசத்திலும் தொன்றுதொட்டு வெகு காலமாக வர்த்தகாபிமானச் சார்பு விசேஷமாய் இருந்து வருகிறது. நம் வியாபாரிகள் கிழாப்பிரிக்கா, பாரசீகம், துருக்கி, சீனா, ஜப்பான் முதலிய தூர தேசங்களுக்குப் போய் வேலை செய்திருக்கின்றனர். சமீபத்தில் குஜராத்தி வர்த்தகர்கள் இங்கிலாந்துக்குச் சென்று ஆங்கிலேய யந்திரக்கருவிகளையும் சாமக்கிரிகளையும் வாங்கி யனுப்புவதற்காக ஏஜென்சிகளை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இந்து முத்து வியாபாரிகள் சமீபத்தில் பாரிஸிலும் லண்டனிலும் வர்த்தகஸ்தானங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்திய ஸ்பீசி பாங்கியார் பிரிட்

டிஷ் ஸாம்ராஜ்யத்தின் மையமாகிய லண்டன் நகரத்திலே ஒரு கிளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதை இந்தியர்களே நிர்வாகம் செய்கின்றனர். இவ்வாறு அந்நிய தேசங்களுக்குச் சென்று பெரிய பெரிய வர்த்தகம் செய்து கொண்டிருப்பவர்களே தற்பொழுது நமக்கு விசேஷமாய்ச் சகாயம் புரிய வேண்டியவராவார்கள்.

## மூலதனம்.

நமக்கு வர்த்தக சாகசமும் தொழிலறிவும் குறைவாயிருப்பதோடு, நமது தொழிலபிவிர்த்திக்குப் பெருத்த இடையூறாயிருப்பது நமக்கு வேண்டிய மூலதனமில்லாமையாம். மூலதனமில்லாமையே இப்பொழுது நமக்குப் பெருங்குறையென்றுங் கூறலாம். இப்பொழுது இந்தியாவில் நம்மவர் 30 கோடி ரூபாய் செலவிட்டுப் பருத்தி நெசவுயந்திரங்களை ஏற்படுத்தியிருத்தல் உண்மையே. ஆனால் இந்தியாவிலுள்ள நாமெல்லோரும் சுதேசி வஸ்திரங்களையே சம்பூரணமாய்த் தரிக்க வேண்டுமென்பது நமது பரமோத்தேசமானதால் நம் தேசம் செல்வநிலையில் தழைத்துத் தலையெடுப்பதற்கு இந்தப் பிரயத்னம் ஏகதேசமானதென்றே சொல்லவேண்டும். ஆகையால் இதற்காக விசேஷமாய்ப் பொருள் சேகரம் செய்வதற்குப் பெருமுயற்சிகள் நடக்கவேண்டும்.

நம்முள் உயர்ந்த விவேகிகள் பிரயத்னம் செய்யுமிடத்து இத்தக்காரியம் எளிதில் முடியக்கூடும், இப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டார் இத்தேசத்திலே ரூபா விகிதக்கடனாக வாங்கியிருக்கும் மொத்தம் ரூபா 105 கோடியாகிறது. இதில் இந்தியர்கள் ரூபா 55 கோடி கொடுத்திருக்கிறார்கள். இந்த தனமத்தனையும் நம் வர்த்தகத்திற்காக நம் கைக்குக் கிட்டாமற் போயினும், இதில் கால்வாசி, அதாவது, 14 கோடி ரூபாயாவது நமக்குக் கிடைக்கும் பட்சத்தில், அதனால் நமது தொழில் முயற்சிகளுக்குண்டாகும் பிரயோஜனம் விசேஷமாகும். இந்தியாவிலுள்ள தேசாபிமானிகள் இந்தப் பணத்தைச் சர்க்காரின் கையிலிருந்து இவ்வாறு திருப்புவதற் கநுகூலமாய்ப் பொது ஜனாபிப்பிராயத்தை அமைக்க முயலவேண்டியது பெரிதும் வேண்டற்பாலதாம். இது அவர்களால் ஆகக்கூடியதே யென்பதற்கு சிறிதும் சந்தேகமில்லை. வர்த்தகத்திலும் தொழில் முயற்சிகளிலும் உண்டாகும் விசேஷலாபமே இந்தப் பணத்தை இவ்வாறு திருப்புவதற்குப் பலமான சாதகமாயிருக்கவேண்டும்.

இதற்குப் பணம் சேகரிப்பதற்கு இன்னொரு வழியும் இருக்கிறது. 1904-05-ம் வருஷத்தில் இந்தியப் பிரஜைகள் போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கியில் சேர்த்துவைத்த பணத்தின் மொத்தம் 14-கோடி ரூபாயாகிறது

இதில் உத்தேசம் 13-கோடி சுத்தமாய்ச் சுதேசிகளின் பணமென்றே சொல்லலாம். இதில் பாதி, அதாவது, 6-கோடியாவது நமது வியாபார முயற்சிக்கு உபயோகப்படுமோயின். அதனுல் நமது தொழில் பிரயத்னங்கள் எவ்வளவோ பலப்பட்டுத் தலையெடுக்கும். பின் சொன்ன கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும், இப்பொழுது கவர்ன்மெண்டாரிடத்தில் ஜனங்கள் பிராமிஸரி நோட்டுகளில் மிகுத்தி வைத்திருக்கும் பணத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கும் சிறந்த உபாயம் என்னவெனில், தேசமெங்கும் தனசாலை (பாங்கி)களை ஏற்படுத்தவேண்டும். இவ்விஷயத்தில் ஏற்கெனவே சாமான்யமாகப் பிரயத்னங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, பூனு, ஆமதபாத், காசி, லக்னௌ, லாகோர் முதலிய இடங்களில் இப்படிப்பட்ட தன சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனல், இந்தச் சொற்ப ஆரம்பங்களினின்றும் பெரும் பிரயோஜனங்கள் விளைய வேண்டியிருக்கின்றன. முக்கியமான பட்டணம் ஒவ்வொன்றிலும் ஒரு பாங்கி பிரத்தியேகமாய் ஏன் இருக்கக்கூடாது? இந்தச் சிறு சாலைகளெல்லாம் பெருத்த ஷகர்களிலுள்ள பாங்கிகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டும், இப்படி செய்யும் பட்சத்தில் தேசத்திலுள்ள மூலதனமவ்வளவும் இவற்றிலேயே சேர்த்து வைக்கப்பட்டு சுதேசியவிர்த்திக்கு விசேஷமாய் விநியோகமாகும்.

யோக்கியரும் சமார்த்தாயமுள்ளவர்கள் இப்படிப்பட்ட பாங்கிகளை-யேற்படுத்தலாம். இதில் கஷ்டமொன்று மில்லை. இந்தியப் பிரஜைகள் பரம்பரையாய் வர்த்தகம் செய்யப் பழகினவராலகயால், பாங்கிகளைப் பரிபாலிக்க சீக்கிரத்திலேயே கற்றுக்கொள்ளலாம். பொறுமை, முன்யோசனை, சிக்கனம், லாபநஷ்டங்களைச் சீர் தூக்கிப்பார்த்தல் முதலிய குணங்களுடையவர்களே பாங்கிகளைப் பரிபாலிக்கத்தக்கவர்கள். இப்படிப்பட்டகுணங்கள் நம்மவருக்கு விசேஷமா யிருக்கின்றன.

அன்றியும் நம் தேசத்தின் நாட்டு நிலைமைகளுடன் நம்முள் யார் தனிகர், யார் தரித்திரர் என்ற சங்கதியும் பிறதேசத்தார்களைவிட நமக்கு நன்ருய்த் தெரிந்திருப்பதால் அதுவும் நமக்கோ ரனுகூலமாகும். பாங்கிகளை நடத்துவதில் இப்படிப்பட்ட அநுபோகம் பெரிதும்பயன்படுவதாகும். ஏற்கெனவே, பம்பாயில் இரண்டு பெரிய பாங்கிகள் ஏற்பட்டிருக்கின்றன சென்னையிலும் "இந்தியன் பாங்கி" ஏற்பட்டிருக்கிறது; கல்கத்தாவிலும் இப்படிப்பட்ட பாங்கியை ஏற்படுத்துவதற்கு ஆலோசனை நடக்கிறது. இவை இப்பொழுது தான் நன்ருய் வேலை செய்வதற்கு ஆரம்பித்திருக்கின்றன. இந்தப் பெரிய பாங்கிகளுக்குக் கிளைகளாகப் பெரிய பெரிய பட்டணங்களிலே சிறு பாங்கிகள் விசேஷமாய் ஏற்படவேண்டும். ஒவ்வொரு பட்டணத்திலும் இந்தச் சிறு பாங்கிகள் நம்பிக்கையாய் வேலை செய்யுமாயின், ஏழைக

அநேகர் தம் பணத்தை இவற்றில் சேர்த்து வைப்பார்கள். ஒருவரிடத்திலும் நம்பிக்கையின்றிப் புத்தியில்லாமல் அநேகர் தம் செல்வத்தைப் பூமியில் புதைத்து வைப்பதுண்டு. இந்த மூடப்பிரஜைகளுக்குச் சமீபத்தில் நல்ல பாங்கி இருக்குமாகில், இவர்கள் தம் பணத்தை இந்தப் பாங்கியில் சேர்த்து வைப்பார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தப் பெருத்த யோசனைகள் ஜனங்களுக்குண்டாக வேண்டுமாயின், அவர்களுக்குக் கல்வியை நன்றாய்ப் புகட்டவேண்டும். இப்படிக் குருட்டுத்தனமாய்ப் பணத்தைப் புதைத்துவைக்கும் வழக்கம் முடிவாக கல்வியால்தான் ஒழியும். ஆயினும், நன்றாய்ப் பரிபாலிக்கப்பட்ட சிறு பாங்கிகளும் இதனிடையில் விசேஷமான நன்மையைச் செய்யக்கூடும்.

இந்தியாவில் நானாவிதப் பொருள்களையும் உண்டாக்கவேண்டிய சுதேசியம் விசேஷமாய் விர்த்தியடைய வேண்டுமாயின், மேற் சொல்லிய உபாய மாத்திரமல்லாமல் வேறு சில வழிகளாலும் நமக்குப் பணம் வந்துகொண்டிருக்கவேண்டும். நாம் பிறதேசங்களிலிருந்து கடன் வாங்கலாமா, அல்லது நமக்குள்ள சொற்ப மூலதனத்தை வைத்துக்கொண்டு வேலை தொடங்கி இந்த தனம் விர்த்தியாகவாக நமது வேலையையும் விர்த்திபண்ணிக் கொள்ளலாமா, என்ற கேள்விகள் உண்டாகின்றன. அந்யதேசங்களிலிருந்து கடன்கொள்ளலாகாதென்று நம்மவருள் சிலர் சொல்லுகின்றனர். முன் ஜப்பானிலுள்ள தேசாபிமானிகளுக்கும் இப்படிப்பட்ட அபிப்பிராயமே உண்டாயிருந்தது. நம் தேசத்தில் வர்த்தகத்தை விர்த்திசெய்வதின் பொருட்டு அந்யதேசத்திலிருந்து கடன் வாங்குவதில் தோஷமில்லையென்பதே காரிய விவகார நீதியாய் யோசித்தால் ஏற்படும். நம் தேசத்தில் இருப்புப் பாதைகளை ஏற்படுத்துவதற்காக இந்தியா கவர்ன்கண்டார் அந்யதேசங்களிலிருந்து கடன் வாங்குவதில்லையா? ஐரோப்பாவில் பெரிய பெரிய அரசர்கள் யுத்தங்கள் நேரும்பொழுது போர்க்கப்பல்களையும் வர்த்தகசாலைகளையும் நிர்மித்துக்கொள்வதற்கு லண்டனிலும், பாரிஸ் நகரத்திலும் கடன் வாங்குகிறார்கள். இதேமாதிரி நாமும் ஏன் செய்யக்கூடாது?

சென்ற வருஷம் இந்த கான்பரன்சுக்கு ப்ரெஸிடெண்டாயிருந்த ஆனரெபில் ஸ்ரீ விட்டல்தாஸ் கூட இவ்வாறே அபிப்பிராயப்பட்டனர். அந்நிய தேசங்களிலிருந்து கடன் முதலானது கொள்ளாமற் போனால் நாமும் விசேஷமாய் வியாபாரம் செய்யமுடியாதென்று இவர் அபிப்பிராயப்பட்டார். ஆனால், இந்தக் கடன் தொகைகளுக்கு மற்றவர்களைவிட நாம் அதிகமாக வட்டி கொடுக்கக்கூடாது. அமெரிக்காவிலுள்ள கனடா நாட்டு வர்த்தகர்கள் இவ்வாறே செய்கின்றனர். தேசாபிமானிகளான கனடாவாசிகள் ஐக்கிய நாடுகளி (United States of America) லிருந்து பண்டிதர்களையும்

ஏற்றுத் தங்கள் தேசத்தின் நிலைமையை விர்த்தி செய்து வருகிறார்கள், ஆனால், இப்பொழுது ஐக்கிய நாட்டு முதலாளிகள் நடத்தி வரும் வேலையில் தம் நாட்டிலும் வர்த்தகத்தில் முதல்வைக்கப் பணமுடையவர்கள் இன்னும் அதிகமாகச் சேர்ந்து லாபம் பெறவேண்டுமென்ற ஆசைமாத்திரம் அந்தக்கனடா வாவிகளுக்கு இயல்பாகவே இருக்கிறது.

## சுதேசியம்.

சுதேசியமென்று சொல்லப்படும் புதிய முயற்சியைப்பற்றி சிறிது கூற வேண்டியிருக்கிறது. இந்த முயற்சியின் நோக்கமென்னவெனில்—இந்தியாவில் கூடியவரையில் இந்தியரின் மூலதனத்தைக்கொண்டே பிரஜைகளுக்கு வேண்டிய பலவகைப் பொருள்களையும் உண்டுபண்ணப் புதிய தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி அதன் மூலமாக நமக்கு வேண்டிய சகல சாமக்கிரிகளையும் நம் தேசத்திலேயே செய்துகொள்ளப் பிரமேயத்தை உண்டாக்க வேண்டுமென்பதேயாம். இதனால் நம் கூலியாட்களுக்கு ஜீவனம் நடக்கும். பலவகைத் தொழில்களும் தலையெடுக்கும். அந்நியதேசங்களின் ஒத்தாசைக் கெதிர்பாராமல் நம் நன்மையை நாமே பார்த்துக்கொள்வதற்கு சாத்தியமாகும் தற்காலத்தில் அந்நியதேசங்களிலிருந்து பலவகை சாக்குகளும் வெள்ளமிட்டு நம் தேசத்தின்மேல் வந்து விழுகின்றனவல்லவா ? அவற்றை யபேக்ஷிக்காமல் நம்மைச் சுதந்தரமுடையவர்களாகவும் செய்யும்.

அந்நியதேசங்களிலிருந்து நூறு வருஷகாலமாக நானாவிதமான சரக்குகளும் நம்தேசத்துக்குள் அபரிமிதவாக வந்துகொண்டிருப்பதால், நம் தேசத்திலுள்ள பல தொழில்களும் கெட்டுக் குடிகள் தரித்திரராய்ப் போகின்றனர். ஆகையால் நம் தேசத்தில் சாதாரண ஜனங்கள் ஜீவனம் நடக்காமல் சிரமப்படுகின்றன. இப்பொழுது நம்தேசத்துக்கு நமக்கவசியமில்லாத சரக்குகள் கூட அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாய் வருகின்றன. அவற்றைச் செய்வதற்கு வேண்டிய பொருள்கள் அநேகமாய் நம் தேசத்திலேயே உற்பத்தியாகின்றன. அதற்கு வேண்டிய கூலியாட்களும் நம் கையில் ஏராளமாயிருக்கிறார்கள். நம்முள் பெருந் தலைவர்களும் பண்டிதர்களும் தனிகர்களும் முன்வந்து சுதேசிய வஸ்துப் பிரசாரத்துக்குப் பெரிய ஊக்கத்தை யுண்டாக்கி நம் பருத்தியாலேயே வஸ்திரங்களையும், நம் கருப்பஞ்சாற்றினாலேயே சர்க்கரையையும் செய்து வேலையாட்களுக்கு வேலை கொடுத்து வறியோர்களைக் காப்பாற்றவேண்டும். அப்பொழுதே அந்நிய தேசங்களின் இறக்குமதி வியாபாரம் சிறிது குறையும்; இதுதான் சுதேசிய முயற்சியின் கருத்து.

இந்தியாவில் நூதனத்தொழில் முயற்சிகளை யேற்படுத்தச் செய்யும் பிரயத்தினம் மிகவும் கொண்டாடத் தக்கதேயென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இந்தியா கவர்ன்மெண்டும் அதற்கனுகூலமாயிருக்கிறது புதிதாய் யாதொரு தொழிற்சாலை ஏற்பட்டாலும், பாங்கி ஸ்தாபிக்கப்பட்டாலும், நீராவிக்கப்பல் ஏற்பட்டாலும் சகலவித அபிப்பிராய முள்ளவர்களும் அவற்றைக்கண்டு சந்தோஷிக்கிறார்கள். அந்நியதேசங்களுக்குச் சென்று தொழிற் கல்வி கற்றுவர விரும்புவர்களுக்கு கவர்ன்மெண்டார் சொற்பமாயும், மகா ஜனங்கள் விசேஷமாகவும் ஸ்காலர்ஷிப்பு எனப்படும் வித்தியார்த்தி சம்பளம் கொடுத்து ஒரு பக்கம் உதவிபுரிய, தைரிய சௌர்யபுத்தி பராக்கிரமமுள்ள பல மாணவர்கள் தம் சொந்தப் பொருளையே செலவு செய்து கொண்டும் அந்நிய தேசங்களுக்குச் சென்று தொழிற் கல்வியில் தேர்ச்சி பெறுகின்றார்கள்.

அந்நியதேசத்துச் சாமான்களை அடியோடு விலக்கவேண்டுமென்றும், கூடுமானவரையில் சுதேசிய சாமான்களையே வாங்கவேண்டுமென்றும், இவை கிடைக்கும்பொழுது பிறநாட்டுச் சாமான்களைக் கொள்வது கொஞ்சமேனும் கூடாதென்றும் யோக்கியரும் தேசாபிமானிகளுமான கனவான்கள் தம்மாலானவரையிலும் நம்மவருக்குப் பிரசங்கித்து வருகின்றார்கள். இவ்வபிப்பிராயங்கள் நம் தேசத்தில் நாட்டுப்புறங்களில் கூடப் பரவி வருகின்றன. இவ்விஷயத்தைப்பற்றிப் பலர் பலவிதமாகக் கருதுகின்றனர். இந்தக் காரியத்தைச் செய்வதில் அடிதடிகள் நடக்குமாயின் அச்செயல்களை வெகு கடினமாய்க் கண்டிக்கவேண்டும். சட்டத்தை மீறி நடந்தால் மாத்திரம் தவறாகுமேயன்றி, மற்றப்படி இந்த முயற்சியில் யோக்கியர்களுக்கு ஆக்ஷேபகரமாயிருக்கும் அம்சம் யாதொன்றுமில்லை. செட்டு முறையை யனுசரித்துப் பல அம்சங்களிலும் அபிப்பிராயபேதம் நிகழ்வது இடல்பே யாகையால், அப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்களுக்குஇடங்கொடுக்கலாம் அவ்வளவு மாத்திரமேயன்றி இந்தத் தேசாபிமான முயற்சிகளை அயோக்கியத்தனமான காரியங்களென்று பழித்துப்பேச யாதொரு நிஷ்கபட சுபாவமுள்ள மனிதனுக்கும் தகாது. இவற்றில் கிரமத்தவறான காரியம் ஒரு சிறிதுமில்லையென்க

இது நல்ல காரியம், நியாயமான காரியம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. இக்காலத்தில் இப்படிப்பட்ட காரியம் அவசியமாய்நடக்க வேண்டுமென்றும் தைரியமாய்ச் சொல்வேன். ஒரு தேசத்தில் நசித்துப் போன தொழில்கள் தழைக்கவேண்டுமென்றாலும், புதிய தொழில் முயற்சிகள் விர்த்தியாக வேண்டுமென்றாலும், இவற்றைச் செய்வோருக்கு துணைத்

தனத்தார் தன சகாயம் பண்ணவேண்டுமென்றும், அன்றியும் அந்நியதேசத்திலிருந் திறக்குமதியாகும் சரக்குகளின்மேல் அதிகமான இறக்குமதிவரி விதிக்கவேண்டுமென்றும் ராஜாங்கச் செட்டு முறை வல்லோர் சொல்கின்றனர்.

இந்தியா கவர்ன்மெண்டார் தொழில் முறைச் செட்டு விஷயங்களில் தங்கள் லாப நஷ்டங்களும் இந்தியப் பிரஜைகளின் லாப நஷ்டங்களும் ஒன்றெனும் கருத்துக் கொண்டிருக்கும் பட்சத்தில், இந்தியத்தொழில் முயற்சிகளைப் பாதுகாக்க ஏதாயினும் உபாயம் செய்திருக்கக்கூடும் ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் வரியில்லா வர்த்தக முறையை யநுசரிக்கும் ஆங்கிலேய பிரஜைகளின் பிரதிநிதிகளாயிருந்து இந்நாட்டை யாளவேண்டியிருப்பதால், இப்பொழுது பிரிட்டன் தேசமானது இந்தியக் கைத்தொழில்களுக்கு எவ்விதமான பாதுகாப்பளிக்கவும் சக்தியற்றிருக்கிறது. ஆகையால் இந்தியப் பிரஜைகள் தாமே சுவயமாக இதில் பிரவேசித்து நம் வர்த்தகத்தையும், தொழில் முயற்சிகளையும் பெருக்கி விர்த்தி செய்யவேண்டும். டாரிபுகள், பவுண்டிகள் என்ற வரிகளை விதித்துக் கவர்ன்மெண்டாரே சுலபமாய் செய்து முடித்திருக்கக்கூடியதை ஜனங்களே தம் சுவயமுயற்சியால் உழைத்துப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது இவ்வேலையில் தேசாபிமானிகள் அனைவரும் பிரவேசிக்கவேண்டும். இதற்கு யாதோர் ஆக்ஷேபமும் சொல்வதற்கில்லை. இவ்விதமாகக் கட்டுப்பாட்டுடன் முயன்று சுவயமாய் உழைக்காவிடில், நம் தேசத்தின் வர்த்தகம் தலையெடாது. இதை நடத்துவதற்கே சுதேசிய முயற்சி யேற்பட்டிருக்கிறது.

இந்த முயற்சியின் சாதகத்தை முடிவாக நிர்ணயிக்கையில், ஆங்கிலேய செட்டு முறை நூலோர் அநுசரிக்கும் விரியில்லா வர்த்தக முறையின் கட்டுதிட்டங்களுக்கு நாம் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை. ஐரோப்பிலும் அமெரிக்காவிலும் உள்ள சுதந்தர நாடுகள் பெரும்பான்மையும் அதிகமான வரி, சுங்கம் முதலியவைகளை யேற்றியே தம் சொந்தத் தொழில் முயற்சிகளைக் காத்துக்கொள்ளுகின்றன. இதற்கு ஜெர்மனியையும் அமெரிக்காவையுமே முக்கியமான திருஷ்டாந்தங்களாக எடுத்துச் சொல்லலாம். இவ்விரண்டு தேசங்களிலும் கவர்ன்மெண்டார் செய்துவரும் வேலையை இந்தியாவில் மகா ஜனங்களே ஒன்றாய்ச் சேர்ந்து செய்யவேண்டியிருக்கிறது.

சுதேசிய முயற்சிவேலைசெய்யத் தொடங்கவே ஒருகோடி ருபாய் மதிப்புள்ள ஜவுளி சரக்குகள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாவது நின்றுவிட்டதென்று 1907-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் அரசிறை மந்திரி தமது பிரசங்கத்திற் சொன்னார். பங்காளத்திலும் மற்றும் சில

இடங்களிலும் கைத்தறி நெசவில் சென்ற நூறு வருஷகாலமாய் இராத விர்த்தி இப்பொழுது உண்டாயிருக்கிறது. நம்தேசத்தாரில் அநேகர் அதன் மூலமாய் ஜீவித்து வருகின்றனர். இந்த சுதேசியப் பிரசாரத்தால் நம் கைத்தொழில் முயற்சியில் எல்லாவழியிலும் அபிவிர்த்தி யுண்டாயிருக்கிறது. 15 பாங்கிகள் 4 கோடி ரூபாய் மொதத மூலதனத்துடன் உண்டாயிருக்கின்றன. 121 லக்ஷம் ரூபாய் முதலுடன் 5-கப்பல் வர்த்தகக் கம்பெனிகள் ஆரம்பமாயிருக்கின்றன. சுமார் 2 கோடி ரூபாய் மூலதனத்துடன் 22 புதிய பஞ்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டு ஜுட் மில்லுகளும், அநேக எண்ணெயாட்டும் மில்லுகளும், சர்க்கரைத்தொழிற்சாலைகளும், சுரங்கவர்த்தகக் கம்பெனிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ கம்பெனிகள் ஏற்பட்டிருப்பது எமக்குத் தெரியாமலுமிருக்கிறது. பருத்தி நூற்பதிலும், நெசவிலும் நூலுண்டைகள் ஐம்பதிலிருந்து 60 லக்ஷமாகவும், தறிகள் 45 லிருந்து 60 லக்ஷமாகவும் விர்த்தியாயிருக்கின்றன. இந்த திருப்திகரமான பலன்கள் விளைந்ததற்குக் காரணம் சுதேசிய முயற்சியும், அதனால் நம்மவர்களுக்குண்டான சுதேசாபிமானமுமேயாம்.

இந்த சுதேசிய முயற்சியை வற்புறுத்தி மகா ஜனங்களனைவரும் சுதேசி சாக்குகளையே வாங்கி வழங்கவேண்டுமென்று சொல்வதால் ஏழைகளின் தலையில் அதிகமான பளு சுமத்தப்படுகிறதென்றும், அன்றியும் அதனால் வேலைப்பாடும் நாகரிக சுவையும் க்ஷீணித்துப்போகின்றனவென்றும் சிலர் வாதிக்கின்றனர். ஆனால் இந்த சுதேசிய முயற்சியால் நம் ஏழை ஜனங்கள் அதிக பளுவையேற்று அவஸ்தைப் படுகிறார்களென்பது முழுவதும் உண்மையன்று. மற்றும் இந்த முயற்சி அமுலுக்கு வந்தது முதல் விசேஷ வேலைத்திறமும், விலை கிராக்கியுமாயிருந்தாலும், இதற்குமுன் ஆதரிப்பாரின்றி அழிந்துபோய்க்கொண்டிருந்த நமது சுதேசி சாக்குகளை மகாஜனங்களுக்கெல்லாம் விசேஷமாய் விளம்பரப்படுத்துவதற்கு முக்கிய சாதனமாய் உதவியிருக்கிறது. சிலர் அதிக விலைகொடுத்தும் சுதேசி சாக்குகளை வாங்கித் தம் தேசாபிமானத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் வர்த்தகத்தைப் பாதுகாக்கச் செய்யும் எந்த முயற்சியிலும் கஷ்டம் இருக்கவே செய்யும். ஒரு ராஜாங்கமானது தன் நாட்டில் க்ஷீணித்துப் போய்க்கொண்டிருக்கும் ஒரு தொழிலைக் கைதூக்கிக்கொடுக்கும்பொருட்டு அந்யதேசங்களிலிருந்து வரும் சாக்குகளின் மீது அதிக வரியைச்சுமத்தும் போதும் இந்தக் கஷ்டம் வாஸ்தவமாகவே யிருக்கிறது. அப்படியிருக்க, அவ்வித கஷ்டத்தை ஜனங்கள் தாமாகவே அநுபவிக்க உடன்படும்போது நாம் ஏன் குறைகூற வேண்டும்? மற்றப்படி வேலைப்பாடும் நாகரீகச் சுவை

யும் குன்றிப்போகின்றதென்று சொல்லுமிடத்து, ஐரோப்பில் யந்திரங்களால் செய்யப்பட்டு நம் தேசத்துக்கு வரும் துணி முதலிய சாக்குகளுக்கு நம் தேச சாக்குகள் குணத்தில் தாழ்ந்தவையென்பது உண்மையன்று. இதன் எதிர்மறையே பலதடவைகளிலும் உண்மையாய்விடுகிறது; அதாவது, சீமை சரக்குகளைவிட நம் சுதேச சாக்குகளே சிலாக்கியமானவையாயிருக்கின்றன.

அன்றியும் ஐரோப்பியர்கள் யந்திரத்திற் செய்யும் சாக்குகளைக் காட்டிலும் நம்மவர் செய்யும் சாக்குகளே வெகுகாலம் நீடித்திருக்கும் விசேஷமுடையனவா யிருக்கிறபடியால், அது மேற்பூச்சான பகட்டின்மையாலுண்டாகும் நஷ்டத்துக்கு ஈடாகின்றது. கடைசியாக, நாணயமற்ற மூட்டைச் சாமான்களை அபிமானித்து அதிகவிலைகொடுத்து வாங்குவதால் நல்ல வேலைத்திறம் நிரந்தரமாய் நசித்துப்போமென்று அஞ்சுவதற்கும் ஆதாரமில்லை. அப்படிப்பட்ட அபிமான போஷணம் அதிகமாகச் செய்தாலும் வெகு சொஞ்சகாலம் வரையில்தானிருக்கும். இதற்குள் நம்மவருக்குள்ளேயே போட்டியுண்டாகி, இச்சாக்குகளை மேன்மேலும் சிலாக்கியமாகச் செய்யும் தொழிலாளர் ஏற்படுவார்கள். கடைசியில் இதனால் ஏழைகளின் உழைப்பை விசேஷமாய் உபயோகிக்கவேண்டியமுகாந்திரம் ஏற்படுகின்றதாதலின், அவர்களுக்கு லாபம் உண்டாவது திண்ணம்.

ஒரு நாட்டின் கைத்தொழிற் செல்வம் விர்த்தியாவதற்கு நாலு அம்சங்கள் இருக்கவேண்டும். அவையாவையெனில்—இயற்கைப் பொருள் (Raw Materials), கைத்தொழில் திறன், மூலதனம், பேரம் ஆகிய இவை எல்லாம்—நம் தேசத்தில் பருத்தி முதலிய இயற்கைப் பொருள்கள் அபரிமிதமாய் விளைந்து வருகின்றன. யந்திரங்களைக்கொண்டு பருத்தியால் நூல் நூற்று, அந்த நூலால் துணி நெய்வதை நம்மவர் படிப்படியாய்க் கற்றுக்கொள்ளலாம். நம்மவர் வஸ்திரங்களை விசேஷமாக நெய்யுமிடத்து, இவற்றை வாங்க மகாஜனங்கள் இஷ்டப்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆகவே மகாஜனங்கள் அந்யதேசத்துச் சாக்குகளை வாங்குவதற்கு பதிலாகக் கூடுமானவரையில் கிடைத்தவரைக்கும் சுதேசி சாக்குகளையே வாங்கி வழங்குகிறதென்று விரதம்கொள்ளவேண்டும். பிரபஞ்சத்திலுள்ள பெரிய பெரிய ராஜாங்கத்தார்கள் நானாவிதமான சாக்குகளையுற்பத்திசெய்து அவற்றைப்பல தேசங்களுக்கும் கொண்டுபோய் விற்று லாபமடைவதற்கு பகிரதப் பிரயத்தினங்கள் செய்துவருகிறார்கள். ஐரோப்பியரின் வியாபாரத்திக்கு ஏஷியவாசிகள் கதவைத்திறந்து வைத்திருக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஐரோப்பியர் மகா தனிகர்களாகையால் மிகவும் உயர்ந்த யந்திரங்களை அமைத்துக்கொண்டு

அவற்றின் வாயிலாகநானாவிதமான சரக்குகளை உற்பத்தியாக்கி, அவற்றைப் பற்பல தேசங்களுக்குக் கொண்டுபோய் மிக்க சொற்பவிலைக்கு விற்கின்றார்கள். ஆகவேதான் ஏஷியாவாசிகள் அபரிமிதமாக ஐரோப்பிய சரக்குகளை அநாவசியமாய் இருக்கும்போது கூட வாங்கி வழங்குகிறார்கள்

ஆகையால் நம்தேச ஜனங்கள் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு சுதேச சரக்குகளையே வாங்கி, சுதேசி வர்த்தகத்தை விர்த்திசெய்வதற்கு விசேஷ பிரயத்னங்கள் செய்யவேண்டுமென்று நம்புகிறேன் சில தேசங்களில் வர்த்தகம் விர்த்தியாகவேண்டுமென்றுகருதி அத்தேசத்து ராஜாக்கள் கூட அந்நியதேசச்சரக்குகளை வாங்கக்கூடாதென்றும், தங்கள் தேசத்துச் சரக்குகளையே வாங்கி வழங்கவேண்டுமென்றும் விரதம் பூண்டிருப்பதும் நமக்கு நன்றாய்த் தெரிந்ததுதானே.

## ரெயில் வண்டிகளில் சரக்குகளையனுப்புதல்.

நமது கைத்தொழிற் சரக்குகளையும் யந்திரங்களையும் தேசத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குக் குறைந்த பொருட் செலவிலும் சீக்கிரமாயும் அனுப்பவேண்டிய விஷயம் தக்கபடி கவனிக்கப்படவில்லை. ஆயினும் நம் தொழில் முறைகள் விர்த்தியடையவேண்டுமானால், இப்படிப்பட்ட சாதனங்கள் இருக்கவேண்டியது அத்தியாவசியகம். சென்ற வருஷம் முக்கியமான ரெயில் மார்க்கங்களுக்குச்சரக்குகளைக் கொண்டுபோகும் சக்தி சுத்தமாகக் குறைந்துபோய்விட்ட சங்கதியை நாம் இன்னும் மறக்கவில்லை. அதனால் வர்த்தகர்களுக்கும் சரக்குகளை உண்டுபண்ணுகிறவர்களுக்கும் பெருத்த நஷ்டம் உண்டானதன்றி, வர்த்தக வியாபார ஏற்பாடுகளெல்லாம் பிரமாதமாய் நிலைகுலைந்து தாறுமாறாய் விட்டன. இப்படிப்பட்ட தடைகள் உண்டாகாதபடி ரெயில்வேயார் எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாயிருந்து வர்த்தகர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கத் தயாராயிருக்கவேண்டுமென்று நாம் கண்டிதமாய்க் கேட்கவேணடும். ரெயில்வேயார் காரியங்களைச் சுறுசுறுப்பாய்ச் செய்யும் பழக்கமுடையவர்களா யிருத்தல் வேண்டும். இவ்விஷயத்தில் ரெயில்வே போர்டார் சில சொற்ப சீர்திருத்தங்களை செய்திருக்கிறார்களென்பது உண்மையேயாயினும், அச்சீர்திருத்தங்கள் வர்த்தகர்களுக்குத் திருப்திகரமான அளவுக்கு இன்னும் வரவில்லை. சரக்குகளைப் போகவேண்டிய இடங்களுக்கு அனுப்புவதிலும், அவை ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்த பிறகு விலாஸதார்களுக்கு அவற்றைச் சேர்ப்பிப்பதிலும் உண்டாகும் காலதாமதம் பெருத்த புகாருக்கு இடங்கொடுப்பதாயிருக்கிறது. இதற்கு திருஷ்டாந்தம்: பம்பாய்க்கும் ஆமதபாத்துக்கும் உள்ள தூரம் 300 மைலேயானாலும்,

பம்பாயில் ஏற்றிய சரக்குகள் ஆமதபாத்தில் விலாஸதார்களுக்குப் போய்ச் சேர்வதற்குள் 8 நாளாய்விடுகின்றது. இடையிலேயுள்ள ஸ்டேஷன்களிலே சரக்குகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறைவுற்றனவாயிருப்பதால், காலதாமதம் இன்னும் அதிகமாகிறது. இந்தியாவிலே ரெயில்வே கூலிகள் மிகச் சரசமாயிருக்கின்றனவென்று மிஸ்டர் மார்லி பெருமை பேசினுர். அவை சரசமாயிருக்கலாம். ஆயினும் அவ்விஷயத்தில் சீர்திருத்தம் செய்வதற்கு அதிக இடமிருக்கிறது. இப்பொழுது ஆமதாபாத்திலிருந்து கான்பூருக்காவது கல்கத்தாவுக்காவது ஒரு பேல் நூலாவது வஸ்திரமாவது அனுப்புவதற்கு எல்லா சார்ஜும் உள்பட சுமார் 15-ரூபாய் ஆகிறது. ஆனுல் ரெயிலிலும் ஸ்டீமரிலுமாகச் சேர்த்து இதில் பாதி கட்டணத்துக்கே கல்கத்தாவுக்கு அனுப்பக்கூடும். எல்லாச் செலவும் வட்டியும் நஷ்டமும் கழித்துப்பார்த்தால், கடைசியில் ரெயில்வேகாரருக்கு விசேஷ லாபமே யுண்டாகிறது. இந்த லாபத்தைக் கொண்டு உள்ளூர்ச் சரக்குகளின் பேரில் விதிக்கப்படும் ரெயில் சார்ஜை ஏன் குறைக்கக்கூடாது? ரெயில் சார்ஜ் குறைந்தால் வர்த்தகத்துக்குப் புதிய முதல் சேர்த்ததுபோலாகுமே. அதைக்கொண்டு வேறு வர்த்தகம் செய்யலாம். அந்தப்பணம் ஜீவதேசத்துக்கு வந்த புதிய ரத்தம்போல் புஷ்டியைத்தரவல்லதாகும். குறைந்த செலவிலும் சீக்கிரத்திலும் சாமான்களைப் போக்குவரத்து செய்யச் சாதனங்கள் ஏற்பட்டிருப்பதினுலேயே அமெரிக்காவானது தற்காலத்தில் தொழில் முயற்சியில் இவ்வளவு மேன்மையடைந்திருக்கிறது இந்த விஷயத்தை இந்தக் கான்பரன்ஸார் நன்ருய்க் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## இரும்பு, நிலக்கரி, வெட்டைநாகம் மாங்கனீஸ்.

நிலக்கரி, மாங்கனீஸ் என்ற உலோகங்களை வெட்டி எடுக்க இந்திய வர்த்தகர்கள் கவனம் செலுத்திவருவதும் இப்பொழுது புதிதாய்த் தோன்றியிருக்கும் தொழில் முயற்சிக் கிளர்ச்சியின் நற்குறிகளில் ஒன்ருயிருக்கிறது. சமீபத்தில் இந்திய மூலதனத்தைக்கொண்டு நிலக்கரி, மாங்கனீஸ் வியாபாரங்கள் சில ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் சந்தோஷகரமாயிருக்கின்றது. இவ்விஷயங்களைப்பற்றிய அறிவின்மையே இதுவரைக்கும் நம் அபிவிர்த்தியைத் தடுத்துநின்றது. இனி வருங்காலத்தில் நம் அபிவிர்த்தியை ஸ்திரப்படுத்துவதற்காகப் பிருதிவிசாஸ்திரத் (Geology) திலும் சுரங்க விஞ்ஞானத்திலும் உலோக விஞ்ஞானத்திலும் (Mining and Metallurgy) இந்திய நிபுணர்களைப் பயிற்றுவிக்கப் பிரயத்னம் செய்வது நலமாம். இந்தியாவில் உலோகங்களை வெட்டி எடுப்பதற்காக அந்நிய

தேசங்களில் ஏற்படும் கம்பெனிகள் தங்கள் பாகங்களில் சிலவற்றை இந்தியப் பங்குக்காரரின் பொருட்டு நிறுத்திவைக்கும்படி கவர்ன்மெண்டார் கட்டாயப்படுத்தவேண்டுமென்று சென்ற வருஷம் ஸ்ரீயுத விட்டல்தாஸ் தாக்கர்சே கூறியது விசேஷமாய்க் கவனிக்கற்பாலதாம். இதிலுள்ள கஷ்டமென்னவென்றால், அந்நியதேசத்துப் பணக்கார முதலாளிகள் சொற்ப லாபம் வந்தாலும் போதுமென்று திருப்தியடைகின்றவர்களாயிருக்க, நம்மவர்கள் பெரும் லாபத்தைக் கோருவதுடன் லாபங்கிடைப்பது நிச்சயமென்று தெரியாத முயற்சிகளில் முன்பணம் போடத்தயங்குகிறார்கள். ஆகவே பேர்போன பார்ஸிவர்த்தக கனவானாகிய காலஞ்சென்ற டாடாவால் ஏற்படுத்தப்பட்ட ''டாடா இரும்பு வேலைகள்'' என்ற வியாபாரமானது சாங்க விஞ்ஞானத்திலும் உலோக விஞ்ஞானத்திலும் ஒரு நூதன கால ஆரம்பத்திற்குரிய அபிவிர்த்தியைக் குறிப்பிடுவதுடன், மேன்மேலும் விளையப்போகும் விசேஷ பயன்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டதாயிருக்கின்றது.

## சர்க்கரை செய்தல்.

இப்பொழுது இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரையில் பேர்பாதி ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த ஐக்கிய மாகாணங்க (United Provinces of Agra and Oudh)ளில் உண்டாகின்றது. ஆனால் ஜாவா, மோரிசு, ஜெர்மனிப் பிரதேசங்களினின்று இந்த சாக்கு அதிகமாக இந்தியாவுக்கு வந்து சாசமாய் விற்கப்படுவதால், நமது சர்க்கரை யுற்பத்தி இந்த தேசங்களுடன் போட்டியில் நிற்கமுடியாமல் கீழேவிழுந்து வருவது வெளிப்படையாகிறது. சுதேசியக் கிளர்ச்சியானது ஜனங்களுடைய மனசார உணர்ச்சிகளைத் தனக்கு சாதனமாகக்கொண்டு சுதேச சர்க்கரையையே உபயோகிக்கவேண்டுமென்று போதித்துவந்தாலும், சுதேச சர்க்கரையின் உற்பத்தி விர்த்தியைப் பலப்படுத்தும் விவகாரம் மாத்திரம் இன்னும் சிக்கற விளக்கப்படாமலே இருக்கின்றது.

மிஸ்டர் ஹாதி சர்க்கரை செய்வதற்குப் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கும் வழி இந்தச் சிக்கை யறுப்பதற்கு ஒருவேளை சகாயமா யிருக்கலாம். இந்தியாவில் தண்ணீர்க் கால்வாய்கள் இப்பொழுதைவிட அதிகமாய் ஏற்பட்டால் கரும்புத் தோட்டங்களை வளர்ப்பதற்கு முடியும். வருஷமுழுதும் கரும்பு கிடைப்பதுதான் பெருங் கஷ்டமா யிருக்கிறது. இதற்குப் பரிகாரம் சொல்வது எளிதன்று. வெல்லப்பாகைச் சுத்திசெய்து சர்க்கரை செய்வது லாபகரமே; ஆனால் மிகுந்த இப்பியைக்கொண்டு றம்(Rum) என்ற சாராயம் செய்வதற்கு சர்க்கார் நம் வர்த்தகர்களுக்கு அநுமதி யளிக்க

வேண்டும்' நம் தேசாபிமானிகள் மாத்திரம் இவ்விஷயத்தில் பாமார்த்திகமாய் உழைத்து வருகிறார்கள். சீக்கிரத்திலேயே சென்னை ராஜதானியில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை யேற்படப்போகின்றது

## சணல் நார் (Jute) பட்டு.

இவ்விரண்டு தொழில்களும் இப்போது வங்காளத்திலேயே இருக்கின்றன. ஆனால் வங்காளத்திலுள்ள ஜுட் மில்லுகளை முதற்பணம்போட்டு நிர்வாகம் செய்கிறவர்கள் ஐரோப்பியர்களே. இந்தியாவின் இந்தப்பக்கத்திலுள்ள எங்களுக்கு இது விசித்திரமாகவே தோற்றுகின்றது. புதுக்கிளர்ச்சி கொண்ட வங்காளதேசமானது தழைத்தோங்கிவரும் இந்தத் தொழில் முயற்சியில் தனக்குரிய பங்கைப்பெறத்தக்க பாத்யதையைப் பாராட்டாதிருப்பதற்கு நியாயத்தைக் காணோம். பட்டுச்சரக்கு வங்காளத்துக்கே காணிபாட்சியாய் ஏற்பட்டிருக்கிறது. காச்மீரமும் கொஞ்சம் கொஞ்சமாய் இதில் முன்வரப் பார்த்துக்கொண்டிருக்கிறது. மைசூரில் பட்டை உற்பத்திசெய்யப் புகழத்தக்க பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். குஜராத்தில் இந்தத் தொழிலை விர்த்திசெய்வதற்காகக் கல்வி கேள்விகளிற் சிறந்த பரோடா மன்னராகிய காயக்வாட் ஸயாஜி ராவ் மகாராஜா பெருமுயற்சி செய்துகொண்டிருக்கிறார். தக்ஷிண மகாராஷ்ட்ரபிராமணர் ஒருவர் ஜப்பானுக்குப்போய்ப் பட்டுப்பூச்சிகளை வளர்த்தல், பட்டெடுத்தல் முதலிய தொழில்களைச் சம்பூர்ணமாய்க் கற்றுவந்து, கொங்கணநாட்டில் ஒரு சிறியதொழிற்சாலையைச் சொந்தமாய் ஸ்தாபித்துச் சீராய் நடத்திவருகிறாராம். இவரது தைரியமான மாதிரியைத் தேசத்தின் மற்றப் பாகங்களிலுள்ளவர்களும் பின்பற்றுவார்களென்று கோரத்தக்கதாயிருக்கிறது

## தோல்வேலை, ரகிதம் செய்தல் முதலிய பிற தொழில்கள்.

தோல் வேலையும் படிப்படியாய்ப் பரவிவந்தாலும், இப் பரவுதலானது அந்நிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளைப்பற்றி நன்றாக உறுதியாய்த் தெரியவில்லை. இத்துறையில் சென்னையிலுள்ள மிஸ்டர் சாட்டர்ட்டன் முயற்சிகள் மெச்சத்தக்கவை. ஆனால் தோல் தொழிலை விர்த்திசெய்வதற்கு இன்னும் விசேஷமாக இடமிருக்கிறது. ஏனெனில் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவுக்கும் 14-கோடி ரூபாய் மதிப்புள்ள தோல் பிரதிவருஷமும் ஏற்றுமதியாகிறது. இதை நாமே நிறுத்திக்கொண்டு நமக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ளலா

மல்லவா? நவஸாரியில் ஒரு தொழிற்சாலையும், பம்பாயில் மற்றொன்றும் சமீபத்தில் ஏற்பட்டுச் சிறப்பாய் வேலை நடந்துவருகின்றது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் சொந்தமாய் ஒரு தோல் கிடங்கு ஏன் ஏற்படக்கூடாது? பம்பாயில் "அலெம்பிக் கெமிக்கல் வொர்க்ஸ்" என்ற தொழிற்சாலை யேற்பட்டதும் ஒரு விசேஷத்தையே குறிப்பிடுகின்றது. அதனால் சமீபத்தில் விளையப்போகிற விசேஷப் பயன்களை அது தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. அம்பாலா, டோரான், பங்கிப்பூர் இந்த இடங்களில் ஏற்பட்டுள்ள கண்ணாடி சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகள் பிரிட்டிஷ் இந்தியாவில் உண்டாயிருக்கும் புதிய சுதேசியக் கிளர்ச்சியினால் விளைந்த பயன்களிற் சிலவாம். கண்ணாடி சாமான்களின் விஷயத்தில் இலகுவான ரெயில்வே கட்டணங்கள் பெரிதும் அவசியமாயிருக்கின்றன. சில வங்காளி தேசாபிமானிகள் எனாமல் பாத்திரங்களையும், மட்கல வேலைகளையும் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். பம்பாய் டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்டானது இளைஞர்களை எனாமல் வேலையில் பயிற்றிவருகின்றது. சஸ்திரசிகிச்சைக்கு (ரணவைத்தியத்துக்கு) வேண்டிய கருவிகள் நல்ல வேலைத்தரமாய்த் தீர்ந்து இப்பொழுது பம்பாயில் உசிதமான விலைக்கு விற்கப்படுகின்றன. அதே இடத்திக்குச் சமீபத்தில் ஏற்பட்டுள்ள புகைச் சுருட்டு, சிகரெட் செய்யும் தொழிற்சாலையையும் இவ்வருஷக் கந்தாயங்களில் ஒன்றாகச் சொல்லலாம் இவ்விதமாக தேச முழுவதும் தொழில் முயற்சிகள் ஏற்படுவதற்கு வேண்டிய இடமிருக்கிறது

## வீட்டுத் தொழில் முயற்சிகள்.

நாட்டுப்புறங்களிலுள்ளவர்களுக்கு ஜீவனோபாயத்தை யுண்டாக்கக்கூடிய சில தொழில்களை அவர்கள் தத்தம் வீடுகளிலிருந்தே செய்யக்கூடிய விதமாக அமைப்பதும் ஒரு முக்கியமான விஷயமாகும். நம் தேசத்தில் பாய்ச்சலாதாரமின்றி மேட்டுப் பயிர் செய்யும் குடியானவர்களெல்லாம் வருஷத்தில் ஆறு மாதம் வேலையின்றியே யிருக்கிறார்கள். இந்த 6 மாதத்திலே இவர்கள் செய்யக்கூடிய சில கைத்தொழில்களை ஏற்படுத்தினால், அவர்களது செல்வ நிலையை எவ்வளவோ உயர்த்தலாம். இவர்களுள் அநேகர் கைத்தறிகளால் துணி நெய்து லாபமடையலாம். மற்றுஞ் சிலர் தையல் வேலையும், சரிகை வேலையும் கற்கலாம். இவ்விஷயம் வெகு முக்கியமானமையால் இதைப்பற்றிய யோசனைகளும், உபந்நியாசங்களும் விசேஷமாய் வெளியாகும்படி முயலவேண்டும்.

## கல்வி புகட்டல்.

ஜாதியத் தொழில் முயற்சியைப்பற்றிய எத்தகைய பரியாலோசனையும் கல்வி புகட்டுதலைப்பற்றிப் பிரஸ்தாபிக்காவிடில் சம்பூர்ணமாகமாட்டாது. தொழிற்சாலைக்கு வேண்டிய கூலியாட்கள் கிடைப்பதில்லையென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். பயிர்த்தொழிலிலும் அதே முறைப்பாடு தான். பெருவாரி (ப்ளேக்) நோயே அதன் முக்கிய காரணங்களில் ஒன்றாயினும், வேறு விசேஷ காரணங்களுமிருக்கின்றன. முக்கியமான தொழில் முயற்சி ஸ்தானங்களிலே ஒரு கூலியாளுக்குக் கிடைக்கும் கூலியானது அவனுக்கிப்பொழுதுள்ள அறிவின்படி செலவிடக்கூடியதற்கு மிஞ்சியிருக்கிறது. அவனுக்குக் கல்வியில்லாமலும், அவனது தேவைகள் சொற்பமாயுமிருக்கின்றன. ஆகவே அவன் தன் வரும்படியைக் குடியிலும், இளப்பமான அந்நிய நாட்டு அலங்கார சாமான்களிலும் அழித்துவிடுகிறான். இதற்கப்பாலும் அவனிடத்தில் ஏதாவது பணம் பாக்கியிருக்குமாயின் தன் கை வறண்டுபோகும் வரையிலும் வேண்டுமென்றே வேலைக்குப் போகாதிருந்து விடுகிறான். இதனிடையில் அவன் வசிக்குமிடம் ஆரோக்கியமற்றதாகவே யிருக்கும். அவன் கடன் சுமையும் கொஞ்சமாவது குறைந்திராது. சாப்பிடும் சாப்பாடும் முன்போலவேதானிருக்கும். ஆகவே அவனது நிலையை உண்மையில் உயர்த்தவேண்டுமானால், அவனுக்கு ஒழுங்கான பிரதம (எலிமெண்டரி) படிப்பு புகட்டுவது மிக இன்றியமையாததாம். இந்தப் படிப்பைக் கூடுமானவரையில் விஸ்தாரமாய்ப் புகட்டவேண்டியது ராஜாங்கத்துக்கும், தனவந்தர்களான பிரஜைகளுக்கும் ஒருங்கே யமைந்த கடமையாகும். மற்ற காரியங்களுக்குப் படிப்பு எவ்வளவு வேண்டியிருக்கிறதோ அவ்வளவு தொழில் முயற்சிக்கும் வேண்டியிருக்கிறது. அந்தப் படிப்பு எவ்விதமாயிருக்கவேண்டுமென்றால், அதைப் பயில்கின்றவனை அந்நிய நாட்டாருடன் போட்டிபோட்டுச் சமாளிப்பதற்குத் தக்க திடகாத்திரமும் மனோபலமும் ஒழுக்கவன்மையும் உள்ளவனாகச் செய்யக்கூடியதாயிருக்க வேண்டும்.

தொழிற்கல்வியைப் விஸ்தாரமாய்ப் பரவச் செய்யவேண்டுவதவசியமென்பதை இப்பொழுது எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதில் சர்க்காரே தலைமைவகிக்கும்படி எதிர்பார்க்க நியாயமிருந்தபோதிலும், சர்வஜனங்களையும் பொறுத்த ஜாதிய விஷயமானதால் ஜனங்கள் முழுவதும் இதை அமைப்பதற்காக ஒன்றுசேரவேண்டும். இது நம்முடைய சொந்த விஷயமே யாகையால், நம் கோரிக்கை ஈடேறும்பொருட்டு நாமே நம்தோள்களைக் கொடுத்துச் சக்கரத்தை எழுப்பவேண்டும். இதற்குவேண்

டிய பணத்தைச்சேகரிப்பதும் நாம் நினைக்கிறபடி அவ்வளவு கஷ்டசாத்திய மானதன்று. பணசேகரத்தைவிடக் காரியத்தை எப்படி ஆரம்பிப்பதென் பதுதான் பெரிய கஷ்டமா யிருக்கிறது. ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு ஜில்லாவும் இன்ன இன்ன தொழில்களுக்காகத் தானே சொந்த மாய்த் தொழிற்கல்விப்பயிற்சி யமைத்துக்கொள்ளுகிறதென்று தீர்மானிக்க வேண்டும். திருஷ்டாந்தமாக, வங்காளமாகாணம் பட்டு, சணல்நார், தேயிலை, அவுரி இந்தத் தொழில்களுக்கு வேண்டியவற்றைச் செய்ய மேற்கொள்ள லாம். ஐக்கியமாகாணங்கள் சர்க்கரை, கண்ணாடி, கம்பளி சாக்கு ள் இவற் றுக்கு ன் நிற்கலாம். பருத்தி, கம்பளி சரக்குகளுக்கு பம்பாய் மாகாணம் ஏற்படலாம். இப்படியே பிறவற்றையும் அமைத்துக்கொள்க. தோல் வேலையை எல்லா மாகாண ஸ்கூல்களிலும் கற்பிக்கவேண்டும் அதுபோல வே, கைவேலை யந்திர விஞ்ஞானம் (Mechanical Engineering), மின் சாரயந்திர விஞ்ஞானம் (Electric Engineering), கைத்தொழில் ரசாய னம் (Industrial Chemistry), முதலிய தொழில் முறை நூல்களையும் நமது தொழிற் கல்விச்சாலைகளிலெல்லாம் கற்பிக்கவேண்டும். இந்தப் பிர யத்தினங்களிலெல்லாம் நாம் எப்பொழுதும் நம் கண்முன் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷய மென்னவென்றால், ஒரு ஜில்லா விலோ அல்லது மாகாணத்திலோ உள்ள தொழிற் கல்விச்சாலைக்கும் அதில் ஏற்பட்டுள்ள, அல்லது ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற, தொழில் முயற்சிகளுக்கும் நிலையான சம்பந்தம் இருக்கவேண்டும். ஒவ்வொரு மாகா ணத்துக்கும் சொந்தமாகக் குறைந்தபக்ஷம் ஒரு தொழிற் கல்விச்சாலையா வது ஏற்பட்டால், பிறகு இந்தியா முழுவதுக்கும் பெரியதொரு சர்வாங்க சம்பூர்ணமான பல தொழிற் கல்விச்சாலையை ஏற்படுத்துவதைப்பற்றி யோசிக்கலாம். அன்றியும் எல்லாத் தொழில் முயற்சி அபிவிர்த்தியும் கடைசியில் சாஸ்திர ஞானத்தின் ஆதீனமாகவே யிருக்கிறது. ஆகவே டாடா ஆராய்ச்சிவித்தியாலயமானது தலைமையான நிர்நிலையாய் அமைந்து, சாஸ்திரத்திலும் கலைஞானத்திலும் அவ்வப்பொழுது புதிது புதிதாய்க் கண்டறியப்படும் முடிவுகளைத் தேசத்திலுள்ள தொழிற்கல்விச் சாலைகளுக் கெல்லாம் சாசுவதமாய்ப் பாய்ச்சி நிரப்பிவைத்துக் கொண்டிருக்கவேண்டு மென்று கோரவேண்டியிருக்கின்றது

தொழில் முயற்சி பலிதமாவதற்கு என்னென்ன வேண்டியவோ அவற்றை யெல்லாம் கற்பிக்க மேற்குறிப்பிட்டவாறு ஏற்பாடு செய்யப்படும் கல்விமுறையே போதுமானதாயினும், தொழில் முயற்சியில் நம் தேசத் துக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வர்த்தக வியாபார சம்பந்தமான கல்வியையும் புகட்டத் தக்கதொரு

ஸ்கூலையோ, காலேஜையோ அமைப்பது இன்றியமையாததாம். அத்தகைய வித்யாலயத்திலே கற்பிக்கப்படக்கூடிய பாடங்களுக்குள்ளே நம் தேசத்திற்குரிய ராஜாங்கச் செல்வநூல், ஸர்வதேசங்களுக்கும் பொதுவான ராஜாங்கச் செல்வநூல், உலகத்திலுள்ள தேசங்களின் பரஸ்பர சம்பந்தத்தை யுணர்த்தும் சொந்தமும் பொதுவுமான சட்ட ஒழுங்கு, வர்த்தகச் சட்டம், பிரதான தேசத்தார்களின் வர்த்தகமுறை, இரண்டொரு பிற நாட்டுப் பாஷைகள், வர்த்தக பூகோளம், ராஜாங்க விஷய பூகோளம் வர்த்தக-வியாபார-விவசாய-கைத்தொழில்-சுரங்க வேலைகளைச் சம்பந்தித்த கணக்கு விவரங்கள், ஆகிய இவைகளும், முடிவில் நாணயவழக்க நூலும் (Currency) அடங்கியிருக்கவேண்டும்

## முடிவுரை

இந்தக் கான்பரன்ஸினுல் விசேஷ பயன்கள் உண்டாகின்றனவென்பது இப்பொழுது நிர்விவாதமாய் ஏற்பட்டுவிட்டது. இது நமது தேசத்திலுள்ளவரனைவருக்கும் உயிர் நிலையைப்பற்றிய மகா முக்கியமான விஷயமாகிய நமது தொழில் முயற்சிகளிலே பொதுஜனங்களுக்குள்ள அக்கறையை ஒருமையத்தில் விசேஷசக்தியுடன் ஆகர்ஷித்துக்காட்டுகின்றது. இந்தக் கான்பரன்ஸின் தூண்டுதல் காரணமாக வெவ்வேறு விஷயங்களில் விசேஷ ஞானமுடைய கல்விமான்கள் எழுதிப்பகரித்த மகா சாமர்த்தியமான உபந்யாஸங்கள் ஒவ்வொன்றும் மிக்க அருமையான சங்கதிகளடங்கிய ஞானாகரமாயிருக்கின்றன. எமது தளரா வூக்கமுள்ள காரியதரிசியும் அவரது உத்தியோகஸ்தர்களுஞ் சேர்ந்துமுடித்த விசேஷவேலையெனத்தகும் "டைரெக்டோரி ஆவ் இந்தியன் கூட்ஸ்" அல்லது "இந்திய சரக்குகளின் விவரத்திரட்டு" எனும் நூலானது மிக்க காரியகரமான பயனுள்ள புத்தகமாகும். நம்முள் சுதேசி சரக்குகளை யுண்டுபண்ணுகிறவர்களுக்கும் வாங்குவோருக்கும் அதையொரு விளம்பர சாதனமாய்ச் செய்யும் பட்சத்தில் பிரயோஜனம் இன்னும் விசேஷமாகும். இவ்வருஷத்திலே சில காரணங்களால் விட்டுவிடப்பட்ட இந்தியப் பொருட்காட்சிச் சந்தையானது இனி எப்பொழுதும் நம் வருஷாந்தக் கூட்டத்தின் அநுபந்தமாயிருக்கவேண்டுமென்று கோரப்படுகிறது. இந்த வருஷவாரியான பொருட்காட்சியை இந்தக் கான்பரன்சே காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியின் சகாயத்தோடும், உடன்சேர்ந்துசெய்யும் உதவியோடும், மேற்கொண்டு நடத்தக்கூடாதா வென்பதை எல்லோரும் யோசிக்கவேண்டும். பொருட்காட்சியானது வெறுங் கண் காட்சியைத் தவிர வேறன்றென்பது பிரத்யக்ஷ நிதர்சனங்களால் ருஜுவாகவில்லை. சரக்குகளை உற்பத்தி செய்வோர் இந்தக்

காட்சியில் அவற்றைக் கொண்டுவந்து காட்டினதால் எவ்வளவு பிரசித்தியடைந்தார்களோ அவ்வளவு பிரசித்தி அவர்களுக்கு வேறுவிதங்களில் கிடைப்பது வெகு அபூர்வம். அன்றியும், இந்திய சரக்குகளின் விரிந்த விவரத்திரட்டுக்கு வேண்டிய சங்கதிகளனைத்தும் இப்படிப்பட்ட பொருட்காட்சிகளால் எளிதில் கிடைக்கும். அதைப் பார்க்கவருகின்றவர்களிற் பெரும்பான்மையோர் வேடிக்கை பார்ப்பவர்களாகவே யிருப்பார்களாயினும், சிறுபான்மையாயுள்ள முக்கியஸ்தர்கள் மாத்திரம் எப்பொழுதும் அதிகரித்துவருகிறார்கள். இவர்கள் இப்பொருட்காட்சிகளால் வர்த்தக வகையில்கூடப் பயனடைகின்றார்கள். ஒருகால் பிறகாட்டுப் போட்டிக்காரர் சிலர் பிரயோஜனம் பெற்றாலும் பெறலாம் ஆனால் தொழில் முயற்சியானது பலதேசத்தாருக்கு மிடையில் நடக்கும் பந்தயமாகி அதில் தகுதியுள்ளவர்களே கெலிக்கக்கூடியதா யிருக்கிறது அப்படியிருந்தாலும், இந்தப் பொருட்காட்சியை சர்வத்ர பிரயோஜனகரமாயிருக்குமாறு செய்வதற்குச் சொல்லப்படும் யோசனைகளையும் எடுத்துக்கொள்ள எப்பொழுதும் சித்தமா யிருக்கிறோம்.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒருதொழிலாலோசனை சபை நடைபெறக் கூடுமானால் நலமே. சமீபத்தில் ஐக்கிய மாகாணங்களில் அப்படிப்பட்ட கான்பரன்ஸ் ஒன்று நடைபெற்றது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் சிறப்பாயுள்ள சில அம்சங்களைத் தவிர்த்து எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான அம்சங்கள் பல உள. நாஷனல் இண்டஸ்டிரியல் கான்பரன்ஸ் எனும் ஜாதியத்தொழிலாலோசனை சபையே இந்தப்பொதுவான அம்சங்களைக் கவனித்தல் வேண்டும். அந்தந்த மாகாணக் கான்பரன்சுகளுக்கும் அது சில யோசனைகளைச் சொல்லக்கூடும்.

இதுவரையில் நாம் வேலை செய்துவந்த மாதிரியாகவே இனியும் தொடர்ந்து செய்வது அநுகூலமேயாயினும், நம்முடைய முயற்சிகளுடன் காரியசித்திகரமான நோக்கங்களையும் சேர்த்துக்கொண்டால் ஜனங்களுக்கு அதில் அக்கறையுண்டாகி நீடித்து வேலை நடப்பதற்கு ஹேதுவாகும். கைத்தறிசீர் திருத்தத்துக்காக ஏற்படுத்தப்பெற்றிருக்கும் வெகுமதிகள் தகுதியுடையனவேயாகும். அவ்வாறே மற்றத்தொழில் வகைகளையும் நன்றாயறிந்துள்ளவர்களின் யோசனையை யனுசரித்து அவ்வத்தொழில்களைக் கைதூக்கிவிடுவதற்காக இந்தக் கான்பரன்ஸ் வேண்டிய சகாயம் செய்யலாம் கைத்தொழில் சம்பந்தமாய் புதிய விஷயங்களைப் படிக்க ஆவல்கொண்டவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத் துதவலாம். அல்லது சில விஷயங்களில் பரீக்ஷை நடக்குமென்று முன்னதாக விளம்பரப்படுத்தி அதில் வல்லமை

காட்டித் தேறுகிறவர்களுக்கும், அல்லது இப்பொழுது இவ்வாறு நடத்துகிறதென் றேற்படாத தொழில்களை ஒழுங்காய் நடத்துவதற்கும் சிறு நூல்களை எழுதுகிறவர்களுக்கும் வெகுமதிகள் அளிக்கலாம். இவற்றிற்கும் இன்னும் இவ்வாறு சொல்லக்கூடிய பல காரியங்களுக்கும் விசேஷ தனம் வேண்டியிருக்கின்றது. அந்தப் பணம் நம்மிடத்தில் அபிமானமுள்ள அயலார்களிடத்திலிருந்து வரவேண்டுமென்று விரும்புவது தேசாபிமானமாகுமா? அந்ய ஜனங்களிடத்திலிருந்து அது வரக்கூடுமோ? எந்த தேசமாவது எப்பொழுதாவது பிறருடைய உதவியைப்பெற்றுத் தொழில் முயற்சியில் மேம்பாடடைந்துளதா? அப்படிப்பட்ட உதவியை ஏற்கும் எண்ணத்தையே கர்வத்துடன் இகழ்ந்து நிராகரிப்பவர் பலர் இங்கே இருக்கிறார்களென்று எனக்கு நிச்சயமாய்த்தெரியும். எல்லாஜனங்களும் தம்சுயமுயற்சியாலேயே மேம்பாடெய்துகிறார்க ளென்பதை நாம் ஒருபோதும் மறக்கல்கூடாது. மற்றக் காரியங்களிற்போலவே இதிலும் தன் முயற்சியும் தன் மறுப்புமே நம்முடைய முக்கிய லட்சியார்த்தங்களா யிருக்கவேண்டும். தன் தாய்நாடடுக்கு இப்பொழுதுற்றிருக்கும் வறுமையைக் கண்டு மனமுருகும் தேசாபிமானமுள்ள ஒவ்வோர் இந்தியனும் தன்னாலியன்றவை வஞ்சனையின்றி உதவிப் பிறரையும் அவ்வாறு செய்யும்படி தூண்டத் தன்னாலானவரையிலும் முயலக்கடவன். மாட்சிமை தங்கிய பரோடா மகாராஜா ஸயாஜிராவ் சொன்னபடி, இந்நாளைய தொழில்முயற்சிக்கு உதவிபுரிவது நம்மெல்லோர் மேலும் சரிசமானமாகப் பொறுப்பாய் விழுந்துள்ள கடமையாகும். ஆகையால் நாம் எல்லோரும் இந்த எண்ணத்துடன் சிரத்தையாய் நடந்து கொள்வோமாயின் எவ்வளவு பணம் வேண்டுமாயினும் எப்பொழுதும் நமக்குக்கிடைக்கும்.

117841

Printed at the Swadesamitran Press, Madras.

2091